**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 87/2020 தேதி- 13.08.2025
(P.W.1) - ராஜலெட்சுமி

குறுக்கு விசாரணை

1. வழக்கு பி-பட்டிகை சொத்தை தொட்டு எங்கள் குடும்பத்தாருக்கு உட்பட்ட வேறு சொத்தும் உள்ளது என்றால் சரிதான்.மேற்சொன்ன பி-பட்டிகை சொத்தில் தான் எங்கள் குடும்பத்தாருக்கு உட்பட்ட 5 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். குடும்ப வீடு உட்பட அனைத்து வீடுகளும் விலைக்கு வாங்கிய பிறகு தான் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன பி-பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் சாணல் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சாணல் எங்கள் உரிமைப்பட்ட சொத்தா என்றால் சரிதான். மேற்சொன்ன சாணல் கால்வாய் இருந்து பிரிகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன கால்வாய்க்கு பேச்சிபாறை அணையில் இருந்து தண்ணீர் பாசனத்திற்காக வருகிறது என்றால் சரிதான். மேற்சொன்ன சாணல் இருந்து விவசாயத்திற்கு செல்கிறது என்றால் முன்பு விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டது தற்போது இல்லை. மேற்சொன்ன சாணல் வழியாகதான் விவசாயிகள் மாடுகளையும், விளை பொருட்களையும், உரங்களையும் எடுத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பி-பட்டிகை சொத்து 07.12.2005 அன்று என் தயார் மரியம்சீமா என்பவரிடம் விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.3 ஆவணத்தில் 34 3/4 செண்ட் சொத்தின் அளவுக்கு பதிலாக 37 3/4 செண்ட் சொத்தாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் 34 3/4 செண்ட் சொத்திற்கு மட்டும் தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் வேறு பட்டாவில் 37 3/4 செண்ட் சொத்து என்று வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வேறு பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் பட்டிகை சொத்தை பார்வையிட்டு அளக்க வந்தபோது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பட்டிகை சொத்தை பார்வையிட வந்தபோது சாணல் வழியாக விவசாயத்திற்கு நீர் சென்று கொண்டிருந்தது என்றால் சரியல்ல. எனக்கு 4 சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 4 சகோதர்களில் 3 சகோதரிகளின் மனைவி தமிழ்நாடு காவல் துறையில் பணி புரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நானும் என் சகோதரியும் ஊர் காவல் படையில் பணி புரிந்து வருகிறோம் என்றால்

சரிதான். மேற்சொன்ன சாணல் பகுதி அரசுக்கு உரிமைப்பட்ட சொத்து என்றாலும் எங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி கூடுதல் சொத்தாக சாணல் பகுதியையும் சேர்த்து ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல.

3. மேற்சொன்ன சாணலை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எங்கள் வீட்டின் கழிவறையில் இருந்து வெளிவரும் கழிவு நீர்களை மேற்சொன்ன சாணலில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு பி-பட்டிகை மற்றும் ஏ-பட்டிகை சொத்திற்கும் இடையே தான் மேற்சொன்ன சாணல் செல்கிறது என்றால் சரியல்ல அது ஓடை ஆகும். மேற்சொன்ன பி-பட்டிகையில் இருந்து ஏ-பட்டிகை சொத்திற்கு சென்று வர ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் தாண்டி செல்வோம். மேற்சொன்ன ஏ-பட்டிகை சொத்து காலி மனையாக தான் உள்ளது என்றால் ரப்பர் மரங்கள் உள்ளது. சி-பட்டிகை சொத்து பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரியல்ல அது பொதுப்பாதையாகும். சி-பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் விஜய் மற்றும் ராஜு, வினு என்வரின் வீடும் மற்றும் 2 கல்லறைகள் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்கள் பிரதிவாதியிடம் இருந்து பாதை அவகாசம் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன நபர்களை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4. மேற்சொன்ன பாதையை பொதுப்பாதையாக விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக விளம்புகை பரிகாரம் அதனுடைய உரிமையாளருக்கு எதிராக கோர முடியாது என்றால் சரியல்ல. பி-பட்டிகை சொத்தான அரசுக்கு உரிமைப்பட்ட சாணல் பகுதியை ஆக்கிரமித்து 2005 ஆவணத்தின்படி வைத்துள்ள நிலையில் மேற்சொன்ன 2005 ஆவணத்தில் சொல்லப்படாத கூடுதல் 3 சென்ட் சொத்தை பொருத்து எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன சாணல் அரசுக்கு சொந்தமானது என்பதால் வழக்கில் அரசை கட்சியாக சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில் நான் சொல்லியுள்ள புல எண்கள் தவறானது என்றால் சரியல்ல. ஏ-பட்டிகை சொத்தில் கிழக்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் இல்லை. நாங்கள் ஏற்கனவே உள்ள பாதையை அடைத்துவிட்டு பிரதிவாதி சொத்து வழியாக பாதை உரிமம் கோரியுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சி-பட்டிகை சொத்தை பயன்படுத்துவது குறித்து எந்த உரிமையும் எங்களுக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல வாய்மொழியாக உரிமை

அளிக்கப்பட்டது. வழக்கு பட்டிகை சொத்தின் கிழக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் என்னுடைய சொத்து உள்ளது. பி-பட்டிகை சொத்தின் தென்கிழக்கு பக்கம் ஒரு கேட் உள்ளது என்றால் இல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் ஆவணங்களுக்கு எதிராக உள்ளது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.